- 7 FEB 2023

சுருக்கம்

வீட்டுவசதி – மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் 2022-2023-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண்.26ல், அறிவிப்பு எண்.21-ல் அறிவிக்கப்பட்ட திட்டமான, வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரியில் 0.24 ஏக்கர் நிலப்பரப்பில் 48 சர்வீஸ் அபார்ட்மெண்ட் (வகை A-32 வகை B-16) (தூண் தளம் + 9 தளங்கள்) ரூ.19.47 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நிலத்தில் வாரிய நிதியைக் கொண்டு கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

==========

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீவ3(2)) துறை

அரசாணை (நிலை) எண். 10 நாள். 23.01.2023,
சுபகிருது வருடம், தை 9,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது:

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண்.திபி/7390/2022, நாள் 08.08.2022 மற்றும் 18.10.2022.

=======

ஆணை:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கை எண்-26-ல் 20.04.2022 அன்று நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்.

"தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் சர்வீஸ் அபார்ட்மண்ட 0.21 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்".

2. அதன்படி., மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் வேலூர் புறநகர் திட்டப்பகுதி-3-ல் அமையப் பெற்ற பொது பயன்பாட்டு மனையில் தற்போதுள்ள 953.10 ச.மீ பரப்பளவுள்ள

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நிலத்தில் இத்திட்டத்தினை வாரிய நிதியை கொண்டு செயல்படுத்த வாரிய தீர்மான எண்.4.09 நாள் 05.07.2022-ல் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

வ.எண்.	திட்டத்தின் பெயர்	மாவட்டம்	உத்தேசிக்கப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகள் / மனைகள்	மொத்த எண்ணிக்கை	தோராய திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	திட்டம் செயல்படுத்தும் முறை
1	2	3	4	5	6	7
1	வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி கிராமம், வேலூர் புறநகர் திட்டப்பகுதி-3. புல எண்.330/1-ல் 0.24 ஏக்கர் நிலப்பரப்பில் சர்வீஸ் அபார்ட்மெண்ட் 48 (வகை A-32, வகை B-16) (தூண்தளம் + 9 தளங்கள்) + கொண்ட குடியிருப்புகள் செயல்படுத்தும் திட்டம்	வேலூர்	சர்வீஸ் அபார்ட்மெண்ட்	48	1947.00	வாரிய நிதி

3. எனவே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர், அவர்கள் வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரியில் 0.24 ஏக்கர் நிலப்பரப்பில் 48 சர்வீஸ் அபார்ட்மெண்ட் (வகை A-32 வகை B-16) (தூண்தளம் + 9 தளங்கள்) ரூ.19.47 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நிலத்தில் வாரிய நிதியைக் கொண்டு கட்டும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு கோரியுள்ளார்.மேலும் அவர் மேற்கண்ட திட்டத்திற்கான விரிவான மதிப்பீட்டினையும் இணைத்து அனுப்பியுள்ளார்.

4.தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆராய்ந்து, அதனை ஏற்று வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரியில் 0.24 ஏக்கர் நிலப்பரப்பில் 48 சர்வீஸ் அபார்ட்மெண்ட் (வகை A-32 வகை B-16) (தூண்தளம் + 9 தளங்கள்) ரூ.19.47 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு

Verified by RealEstate

வீட்டுவசதி வாரிய நிலத்தில் வாரிய நிதியைக் கொண்டு கட்டும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் அளித்து, ஆணையிடுகிறது.

5. மேற்கண்ட ஆணையின்படி தகுந்த நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன், அத்துறையின் அ.சா.கு.எண்.49888/நிதி(வீவா(ம)நவ)/2022, நாள்.05.12.2022-ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை - 107.
முதன்மை கணக்கு அலுவலர் (A&E), சென்னை - 18.
முதன்மை கணக்கு அலுவலர் (G&SSA), சென்னை-18.
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -09.
மாண்புமிகு அமைச்சர் (வீ.வ.(ம) ந.வ.) அலுவலகம், சென்னை -09.
மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) மனித வள மேலாண்மை) அலுவலகம், சென்னை -09.
தலைமைச் செயலாளர் அலுவலகம், சென்னை-9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை - 09.
நிதித்(வீ.வ.(ம) ந.வ.) துறை, சென்னை - 09.
வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை (அ.ந.மு./வ.செ.)த்துறை, சென்னை - 09.
இகோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
23/01/2023.

Verified RealEstate ™